## வகுப்பு - 8 - புவியியல், 5. இடர்கள்

**பயிற்சி வினாக்கள்:**

1. ஹசார்டு (Hazard) என்ற சொல் ஹாசர்ட் (Hazart) என்ற -------------- சொல்லிலிருந்து வந்தது.

   1. இலத்தீன் 2. பிரெஞ்சு 3. அரபு 4. கிரேக்கம்

2. தமிழகத்தில் உள்ள கடற்கரை மாவட்டங்கள் எத்தனை?

   1. 13 2. 12 3. 11 4. 10

3. பொருத்துக :

   i. சுற்றுச்சூழல் சார்ந்த இடர்கள் - a. மூடுபனி

   ii. உயிரியல் சார்ந்த இடர்கள் - b. புவி வெப்பமடைதல்

   iii. நிலவியல் சார்ந்த இடர்கள் - c. சின்னம்மை

   iv. வளிமண்டலத்தால் ஏற்படும் இடர்கள் - d. சுனாமி

   1. i - b ii - c iii - d iv - a 2. i - b ii - a iii - d iv - c

   3. i - c ii - a iii - b iv - d 4. i - d ii - a iii - c iv - b

4. இந்திய தரநிர்ணய நிறுவனம் இந்தியாவை ______ நில அதிர்வு மண்டலங்களாக வகைப்படுத்தியுள்ளது.

   1. 5 2. 4 3. 3 4. 2

5. தவறான இணையைக் கண்டறிக.

   1. மண்டலம் 2 - நாட்டின் பிற பகுதிகள்

   2. மண்டலம் 3 - தமிழ்நாடு

   3. மண்டலம் 4 - புதுடெல்லி

   4. மண்டலம் 5 - இராஜஸ்தான்

LIVEWORKSHEETS

6. ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகியவை இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் அடிப்படையில் எந்த மண்டலத்தின் கீழ் அமைந்துள்ளது?

1. மண்டலம் 2
2. மண்டலம் 3
3. மண்டலம் 4
4. மண்டலம் 5

7. வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு முக்கிய காரணிகளில் மனிதக் காரணிகள் அல்லாதவை எது?

1. முறையற்ற நீர்ப் பாசன முறைகள்
2. முறையற்ற வேளாண் முறைகள்
3. போதிய வடிகால் அமைப்பு இல்லாமை
4. காடு அழிப்பு

8. தேசிய நீரியியல் நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?

1. லக்னோ
2. அலகாபாத்
3. புதுடெல்லி
4. அகமதாபாத்

9. கீழ்க்காண்பவைகளில் எது சரி?

(i) இந்தியாவின் கிழக்குக் கடற்கரையை விட மேற்குக் கடற்கரை பகுதிகளில் புயல் அலைகளின் பாதிப்பு குறைவாகும்.

(ii) கிழக்குக் கடற்கரை பகுதிகளில் , நாகப்பட்டினம், மசூலிப்பட்டினம் போன்றவை புயலால் அதிக பாதிப்புக்கு உள்ளாகும் இடங்களாகும்.

1. i மட்டும் சரி
2. ii மட்டும் சரி
3. இரண்டும் சரி
4. இரண்டும் தவறு

10. சூழல் நீரியல் வறட்சி எத்தனை வகைப்படும்?

1. 2
2. 4
3. 3
4. 5

11. அதிக வறட்சிக்கு உள்ளாகும் பகுதிகளில் அல்லாதது எது?

1. அகமதாபாத் முதல் கான்பூர் வரை உள்ள வறண்ட பகுதிகள்
2. கான்பூர் முதல் ஜலந்தர் வரை உள்ள பகுதிகள்
3. மேற்குத் தொடர்ச்சி மலையின் காற்று மறைவு பகுதிகள்
4. கிழக்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதிகள்

LIVEWORKSHEETS

12. வறட்சியால் பாதிப்புக்கு உள்ளாகும் மக்கள் தொகையின் சதவீதம் என்ன?

1. 12 % 2. 14 % 3. 16 % 4. 18 %

13. இந்தியாவில் எத்தனை சதவீத நிலப்பரப்பு நிலச்சரிவு அபாயத்திற்கு உள்ளாகும் பகுதியாக கண்டறியப்பட்டுள்ளது?

1. 15% 2. 20% 3. 25% 4. 30%

14. தமிழ்நாட்டில் நிலச்சரிவால் அதிகம் பாதிக்கப்படும் பகுதி எது?

1. ஏர்வாடி 2. ஊட்டி 3. ஒகேனக்கல் 4. ஆனைமலை

15. செர்னோபில் அணு உலை விபத்து எந்த ஆண்டு நிகழ்ந்தது?

1. ஏப்ரல் 26, 1986 2. மே 26, 1986

3. ஜூன் 26, 1986 4. ஜூலை 26, 1986

16. 2016 ஆம் ஆண்டு 'கதிர் இயக்கவியல் சார் மற்றும் சுற்றுச்சூழல் உயிர்க்கோளப் பெட்டகம்" என செர்னோபில் பகுதியை அறிவித்த நாடு எது?

1. உக்ரைன் 2. கியூபா

3. பிரேசில் 4. எத்தியோப்பியா

17. எளிதில் தீப்பற்றக்கூடிய கழிவு எது?

1. கரிமக் கரைப்பான்கள் 2. எண்ணெய்கள்

3. கரிமச் சக்திகள் 4. இவை அனைத்தும்

18. குடிசார் அபாயகரக் கழிவுகள் அல்லாதது எது?

1. பூச்சிக்கொல்லிகள் 2. படைக்கலன் உற்பத்திக் கழிவு

3. எண்ணெய்க் கழிவுகள் 4. குடிசார் மின்கலன்கள்

19. முதன்மை மாசுபடுத்திகள் அல்லாதது எது?

1. சல்பர் டை ஆக்சைடு 2. துகள்ம பொருட்கள்

3. கார்பன் டை ஆக்சைடு 4. தரைமட்ட ஓசோன்

LIVEWORKSHEETS

20. இந்தியாவில் நீர் மாசடைதலில் முக்கிய காரணங்கள் அல்லாதது எது?

1. தொழிற்சாலைக் கழிவுகள்
2. கடல் நீர் உட்புகுதல்
3. வேளாண்மை பயன்பாடு
4. திண்மக் கழிவுகள்

21. புவியிலுள்ள உயிர் மற்றும் உயிரற்ற பொருட்களைப் பாதிக்கக்கூடிய நிகழ்வை ______. என்கிறோம்.

1. இடர்
2. அழிவு
3. ஆதாயம்
4. சலனம்

22. தவறான இணையைக் கண்டறிக.

1. ஹசார்ட் - பிரெஞ்சு
2. ஹசார்டு - ஆங்கிலம்
3. அஸ் - சஹர் - உருது
4. அசார் - ஸ்பானியம்

23. ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் ஒரு அபாயகரமான நிகழ்வு எது?

1. பேரழிவு
2. பேரிடர்
3. இயற்கை இடர்கள்
4. சமூக சீரழிவு

24. மனித உயிர்கள் மற்றும் உடைமைகளுக்கு அச்சுறுத்தலை உருவாக்கும் இயற்கையான நிகழ்வுகள் ______ எனப்படும்.

1. இயற்கை இடர்கள்
2. சமூக சீரழிவு
3. பொருளாதாரச் சீர்கேடு
4. மண் மாசுபடுதல்

25. இடர்களின் வகைகளில் சரியானது எது?

1. நிகழ்விற்கான காரணிகளின் அடிப்படையிலான இடர்கள்
2. தோற்றத்தின் அடிப்படையிலான இடர்கள்
3. இரண்டும் சரி
4. இரண்டுமே தவறு

26. நிகழ்விற்கான காரணிகளின் அடிப்படையிலான இடர்களில் அல்லாதது எது?

LIVEWORKSHEETS

1. இயற்கையினால் ஏற்படும் இடர்கள்

2. உருவாகும் அடிப்படையிலான இடர்கள்

3. மனித செயல்களால் உருவாக்கப்படும் இடர்கள்

4. சமூக - இயற்கைக் காரணிகளால் ஏற்படும் இடர்கள்

27. சரியான இணையைக் கண்டறிக.

1. இயற்கை இடர்பாடுகள் - சூறாவளி

2. மனிதனால் உருவாக்கப்படும் இடர்கள் - நிலச்சரிவு

3. சமூக - இயற்கை இடர்கள் - அணைக்கட்டு உடைதல்

4. உருவாகும் அடிப்படையிலான இடர்கள் - உடல் நலம்

28. தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் எங்கு உள்ளது?

1. மும்பை 2. கர்நாடகம் 3. ஆந்திரா 4. புதுடெல்லி

29. பொருத்துக:

| நில அதிர்வு மண்டலங்கள் | | அபாயத்தன்மை |
|---|---|---|
| i. மண்டலம் 5 | - | a. மிதமானது |
| ii. மண்டலம் 4 | - | b. குறைவு |
| iii. மண்டலம் 3 | - | c. மிக அதிகம் |
| iv. மண்டலம் 2 | - | d. அதிகம் |

1. i - c ii - d iii - a iv - b
2. i - c ii - a iii - b iv - d
3. i - d ii - c iii - b iv - a
4. i - d ii - c iii - a iv - b

30. வளிமண்டலத்தில் குறைந்த காற்றழுத்த பகுதிகளில் சுழலும் வலிமையான காற்றே _______ எனப்படும்.

1. காற்று சுழற்சி 2. நீர் சுழற்சி 3. சுனாமி 4. சூறாவளிப் புயல்

31. சூறாவளிப் புயல் காற்றின் வேகம் மணிக்கு _______ கி.மீ. வரை வீசக்கூடும்.

1. 200 2. 300 3. 350 4. 500

LIVEWORKSHEETS

32. சூறாவளிப் புயல் காற்றின் மழைப்பொழிவு நாளொன்றுக்கு சுமார் _______ செ.மீ. வீதம் பல நாட்கள் பெய்யக்கூடும்.

1. 30 2. 40 3. 45 4. 50

33. நாட்டின் _______ பங்கு பகுதிகள் வறட்சியினால் பாதிக்கப்படுகின்றன.

1. 2/4 2. 1/3 3. 2/5 4. 1/5

34. ஆண்டு மழைப்பொழிவு _______ செ.மீ. க்கும் குறைவான மழை பெறும் பகுதிகள் இந்தியாவில் வறட்சிக்கு உள்ளாகும் பகுதிகளாகும்.

1. 60 2. 70 3. 50 4. 40

35. கடலடி நில அதிர்வு, கடலடி நிலச்சரிவு மற்றும் எரிமலை வெடிப்பு ஆகியவற்றின் காரணமாக கடலில் ஏற்படும் பேரலைக்கு _______ என்று பெயர்.

1. புயல் 2. நிலநடுக்கம்

3. சுனாமி 4. எரிமலை வெடிப்பு

LIVEWORKSHEETS